விவிலியப் படக்கதை - 16

ஓசேயா



ஓசேயா

வட நாடான இஸ்ரயேலுக்கு அனுப்பப்பட்ட இறுதி இறைவாக்கினர் ஓசேயா ஆவார். இவர் கிமு 8 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்கிறார். அரசியல் கிளர்ச்சிகளாலும், ஆட்சி மாற்றங்களாலும் நாடு முழுவதும் குழம்பி இருந்த காலமது. இஸ்ரயேலின் அழிவு பற்றிய ஆமோசின் முன்னறிவிப்புகள் இவர் காலத்தில் உண்மையாகின்றன.

இரண்டாம் எரொபவாம் அரசரின் மறைவுக்குப் பின் (கிமு 786-746) இஸ்ரயேலின் அமைதியும் செழிப்பும் முடிவுறுகின்றன. தொடர்ந்து இருபது ஆண்டுகளில் அடுத்தடுத்து ஆறு அரசர்கள் தோன்றி மறைகிறார்கள் (செக்கரியா 746; சல்லூம் 745; மெனகேம் 745-738; பெக்காகியா 738-737; பெக்கா 737-732; ஓசேயா 732-721). அரசியல் புரட்சிகளாலும், கொலைகளாலும் இஸ்ரயேல் குழம்புகிறது. இந்நேரம் அசீரியா ஆற்றல்மிக்க பேரரசாக, திறமைமிக்க அரசர்கள் மூன்றாம் திக்லத் பிலேசர் (745-757), ஐந்தாம் சல்மனேசர் (726-722), இரண்டாம் சார்கன் (721-724) போன்றோர் தலைமையில் மலர்கிறது. இஸ்ரயேலின் அரசர்கள் அசீரியாவுடனும், மற்றொரு வல்லரசான எகிப்துடனும் அடிக்கடி தங்கள் ஒப்பந்த உறவை மாற்றிக் கொள்கிறார்கள். இத்தகைய நிலையற்றப் போக்கு இஸ்ரயேலை அழிவுக்கு இட்டுச் செல்கிறது.

இஸ்ரயேலின் வீழ்ச்சியை விரைவுபடுத்திய காரணிகள் இன்னும் பல உண்டு. இஸ்ரயேல் அரசியல் குழப்பத்தில் மூழ்கியபோது, ஆமோஸ் கண்டனம் செய்த எல்லா தீமைகளும் பெருமளவில் பெருகியதுடன், நாடு முழுவதும் பரவின. கொலையும் கொள்ளையும் அன்றாட நிகழ்வுகளாயின. செல்வந்தர்களின் சுகபோக வாழ்வும், ஏழைகள் ஒடுக்கப்படுதலும், நீதிபதிகளின் தீராத பண ஆசையும், சாதாரண மக்களால் பொறுத்துக் கொள்ள இயலாதவை ஆகின்றன. குருக்களும், இறைவாக்கினர்களும் உடன்படிக்கைச் சட்டங்களைக் கற்பித்து ஒழுக்கநெறிகளைப் பாதுகாப்பதற்குப் பதிலாக, பணத்தின் மேலுள்ள பேராசையினால் சுரண்டலுக்குத் துணை போகிறார்கள். வழிபாட்டு முறைகள் தரம் தாழ்ந்து கடவுளிடம் உதவிகளைப் பெற பேரம் பேசுபவை ஆகின்றன. ஒரே பீடத்தில் யாவேயையும், பாகாலையும் வழிபடுகிறார்கள். இவ்வாறு இஸ்ரயேலின் அரசியல், சமூக, மத அமைப்புகள் முற்றிலுமாக சீரழிந்து போகின்றன. இந்தச் சூழலில்தான் ஓசேயா இறைவாக்கினர் அன்பின் இறைவாக்கினராக யாவேயால் அனுப்பப்படுகிறார்.

ஓசேயா ஆழமான அன்பை அனுபவித்தவர். பிரமாணிக்கமின்மையின் கசப்பையும் சுவைத்தவர். ஆலயத்தில் வாழும் ஒரு விபச்சாரிப்பெண் என்று தெரிந்தும் கோமேரைத் திருமணம் செய்கிறார். அவளை மிக அதிகமாக அன்பு செய்கிறார். ஆனால், கோமேர் இந்த அன்புக்குப் பதிலன்பு காட்டவில்லை. அவரை விட்டுப் பிரிந்து வேறு காதலர்களின் பின் அலைகிறாள், அடிமைநிலைக்குத் தள்ளப்படுகிறாள். கோபம், வேதனை, அன்பு, வெறுப்பு என்ற உணர்வுகளால் அலைக்கழிக்கப்படுகிறார் ஓசேயா.

விவிலியப் படக்கதை - 16

ஓசேயா

எல்பின்

தியோ

கிமு 746 ஆம் ஆண்டு வடநாடான இஸ்ரயேலின்
தலைநகரம் சமாரியாவின் தெருக்களிலே
ஒரு அரச அறிவிப்பு கேட்கிறது.




இளவரசர் செக்கரியாவின் முடிசூட்டு விழா
இறைவாக்கினர் திப்லயிம், இந்தக் கொடுமைக்கு எதிராக எதுவும் கூறமாட்டீரா?
ஓ பாகால் கடவுளே, வளமையின் ஆண்டவரே, இந்தப் பலியை ஏற்றுக் கொண்டு எங்களை ஆசீர்வதியும்.
ஓசேயா, நான் உள்ளம் உடைந்து நிற்கிறேன்.
வல்லமை மிக்க பாகாலே, இந்தக் குழந்தையின் இரத்தத்தால் இந்த மணிமுடியைப் புனிதப்படுத்தும். அரசருக்கு நீண்ட ஆயுளையும், நாட்டிற்கு வளமையையும் அருளும்.
பாகால் கடவுள் கூறுகிறார்: நீர் என் மகன். இன்று நான் உன்னை இஸ்ரயேலின் அரசராகத் திருப்பொழிவு செய்கிறேன்.


வழிபாட்டின் அடுத்தப்பகுதி. பாகாலின் குருக்கள் நடனப் பெண்களை அணுகுகிறார்கள்.
கொலையும் விபச்சாரமும். சீ... என்ன அருவருப்பு!
!
அமைதியாக இரு. என் மகனே.
அது என் மகள் கோமேர். நீ விரும்பினால் அவளைக் காப்பாற்று.
அவள் ஒரு விபச்சாரியா?
அன்றிரவு ஓசேயா கடவுளின் அழைப்பைப் பெறுகிறார்.
ஓசேயா, நீ போய் அந்த விபச்சாரியை மணந்து கொள். என்னைக் கைவிட்டு இஸ்ரயேலும் ஒரு விபச்சாரியாகி விட்டது.


மறுநாள் பாகால் தெய்வத்தின் கோவிலிலே...
உனக்கு என்ன வேண்டும்?
கோமேர்!
என்ன! இப்படி உற்றுப் பார்க்கிறீர்.
வா, நான் உன்னுடன் பேச வேண்டும்.
!
எனக்கு அரைமணி நேரம்தான் இருக்குது.
நீ இங்கே வந்து எவ்வளவு காலம் ஆகிறது?
சமாரியாவிலுள்ள குருவாகிய உனக்குத் தெரியாதா?
இல்லை. நான் பாகாலின் அர்ச்சகரும் இல்லை. சமாரியாவைச் சார்ந்தவனும் இல்லை.
அப்படியானால் நீர் யார்? ஏன் இங்கு வந்தீர்?
என் பெயர் ஓசேயா, இஸ்ரியேலைச் சார்ந்தவன்.
!!


கோமேர் நான் உன்னை அன்பு செய்கிறேன். நீ என்னோடு வருகிறாயா?
நீர் என்ன சொல்கிறீர்? நான் கோவிலிலே நடனமாடும் ஒரு நங்கை! யாரும் என்னை அன்பு செய்யக் கூடாது.
எனக்குத் தெரியும் கோமேர். உன்னை இந்த நிலைக்குக் கொண்டு வந்தது யார் என்றும் எனக்குத் தெரியும். யாவே எல்லாவற்றையும் பார்க்கிறார்.
எனக்கென்று ஒரு வாழ்வு இல்லை.
கோமேர்
நாம் இங்கிருந்து போய் விடுவோம். நாம் இஸ்ரியேலுக்குப் போவோம்.
நான் போக வேண்டும். என்னை அவர்கள் தேடுவார்கள்.
அதற்கு முன்னால் நாம் போய்விடுவோம்.
எனக்குப் பயமாயிருக்கு.
கோவிலினுள்ளே
இன்றைய விழா கோமேரின் நடனத்துடன் முடிவுறும்.

சீக்கிரம் வா! நமக்காக ஒரு குதிரை ரெடியாயிருக்குது.

நான் என் அப்பாவிடம் ஒரு வார்த்தை சொல்லி விட்டு வருகிறேன்.

வேண்டாம். நான் சொல்லி விட்டேன்.

ஏன் எனக்காக இவ்வளவு ஆபத்தான செயலைச் செய்கிறீர்கள்?

அன்றிரவு அவர்கள் இஸ்ரியேலுக்கு ஓடிப் போகிறார்கள்.

கோமேரின் திடீர் மறைவினால் கோபமுற்ற தலைமை குரு திப்லயிமை அரசர்முன் இழுத்து வருகிறார்.

இந்த வயதான அயோக்கியன் கோவிலின் தலைமை நாட்டியப் பெண்ணைக் கடத்திச் சென்று விட்டான்.

!

இவனிடமிருந்து உண்மையை வரவழைக்க முடியவில்லையா? காவலர்களே!

அவன் வாயில் நாக்கு இருக்கிறதா என்பதை நான் பார்த்துக் கொள்கிறேன்.

!!

!

ஆண்டவரே, என் கடவுளே, என் குரலைக் கேட்டருளும். என் இரத்தத்திற்குப் பழிவாங்கும்... ஆ...

முட்டாள்... கோமோர் எங்கே?

!?

வட எல்லையிலிருந்த நம் வீரர்கள் புரட்சி செய்கிறார்கள். அவர்கள் சல்லூமை அரசராக்கியுள்ளார்கள்.

என்ன? படைப் பிரிவு முழுவதும் நமக்கு எதிராக எழுந்துவிட்டதா?

எல்லோரும் இல்லை. சிலர் கொல்லப்பட்டுள்ளார்கள். சிலர் ஓடி ஒளிந்துள்ளனர்.

?

முழுப்படையுடன் வடக்கு நோக்கிச் செல்ல தயாராகுங்கள்.

வழியிலே பதுங்கியிருந்த கிளர்ச்சியாளர்களால் அரசர் செக்கரியா கொல்லப்படுகிறார்.

அரசர் செக்கரியா கொலை செய்யப்பட்டு விட்டார். நாளை தளபதி சல்லூம் சமாரியாவில் அரியணை ஏறுகிறார்.

கடவுளுக்கு நன்றி. இனிமேலும் அவர்கள் நம்மைத் துரத்திக் கொண்டு வரமாட்டார்கள்.

கடவுள் நம்மைப் பாதுகாப்பார் என்று சொன்னேனல்லவா?

மாதங்களும் வருடங்களும் உருண்டோடுகின்றன. அடிக்கடி நடந்த புரட்சிகளும், தொடர்ந்த ஆட்சி மாற்றங்களும் நாட்டைக் குழப்பத்திலே ஆழ்த்துகின்றன. தெருவெங்கும் இறந்த உடல்கள் குவிந்திருக்கின்றன.

இஸ்ரியேலில்

!!

தயவுசெய்து சீக்கிரமா ஒதியாவைக் கூப்பிடுங்கள்.

என்ன அழகான குழந்தை!

!









படைத் தளபதி மெனகேம் சல்லூமைக் கொன்று தன்னைத்தானே சமாரியாவின் அரசராக்கிக் கொள்கிறான்.



இரு வருடங்கள் கழிந்து கோமேர் ஒரு மகளைப் பெற்றெடுக்கிறார்.

இவளை சாரா என அழைப்போம்.

இல்லை. இவளுக்கு லோ ருகாமா எனப் பெயரிடலாம்.

ஏன் அப்படி?

அதாவது அன்பு செய்யப்படாதவள். கடவுள் இஸ்ரயேல் மேல் இனி ஒருபோதும் அன்பு காட்டமாட்டார்.

?

இவள் நமது மகள். இஸ்ரயேல் அல்ல.

இஸ்ரயேல் மேல் விழப்போகும் சாபத்தின் அடையாளமாக இவள் இருப்பாள்.

!?

என்ன இது? உங்களுக்கு என்ன ஆயிற்று?

எனக்குத் தெரியாது. இவ்வளவுதான் என்னால் சொல்ல முடியும்.

ஓசேயா தன் மூன்றாவது மகனுக்கு 'லோ அம்மீ' என்று பெயரிடுகிறார். அதன் பொருள் 'என் மக்கள் அல்ல' என்பதாகும். கோமேர் தன் பொறுமையை இழக்கிறாள்.

நான் கஷ்டப்பட்டு குழந்தைகளைப் பெற்றெடுப்பது நீர் அவர்களை இப்படி இழிவு படுத்துவதற்காக அல்ல.

கோமேர், என்னை மன்னிச்சிடு. ஆனால் இதைச் செய்யுமாறு நான் கட்டாயப்படுத்தப் பட்டுள்ளேன்.


கழுகு ஒன்று ஓசேயாவின் கனவில் தோன்றுகிறது.
ஓசேயா அதைப் பின்தொடர்கிறார்.
ஆண்டவரது வீட்டின் மேல் ஒரு கழுகு. இதற்கு என்ன அர்த்தம்?
ஓசேயா, என் மக்கள் இஸ்ரயேலர் என் உடன்படிக்கையை உடைத்துவிட்டார்கள்.


!!
உடன்படிக்கையின்படி அவர்களை நான் தண்டிக்கப் போகிறேன். என் கோவிலைத் தீட்டுப்படுத்திய குருக்களிலிருந்து தொடங்குவேன். நீ உடனே சமாரியாவுக்குப் போ.
மறுநாள் காலை...
கோமேர், நான் உடனடியாக சமாரியாவுக்குப் போக வேண்டும். இது யாவேயின் கட்டளை.
இந்த மூன்று குழந்தைகளையும் வைத்துக் கொண்டு நான் என்ன செய்வேன்?
அப்பா!
ஆண்டவரின் அழைப்பை நான் எப்படி எதிர்க்க முடியும்?
!
உம்மை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. உமக்கு ஏதாவது சுகவீனமோ என எண்ணத் தோன்றுகிறது. உமது மனைவி, பிள்ளைகளை விட இந்த அழைப்பு முக்கியமானதாகி விட்டதா?


நாம் வாழ்வதற்குப் போதுமானவை நம்மிடம் உள்ளன. வேலையாட்களும் அண்டை வீட்டாரும் நல்லவர்கள்.
யாவேயிடம் நம்பிக்கை வை. பொறுமையோடு காத்திரு. நான் விரைவில் திரும்பி வருவேன்.
!?
ஒரு விதத்தில் அவர் போனதில் எனக்கு சந்தோஷம்தான். அவரது வினோதமான நடத்தையோடு யாருதான் ஒத்துப் போகமுடியும்?
இந்த வாழ்க்கை எனக்கு அலுத்துப் போய் விட்டது.
அந்த நாட்கள் எவ்வளவு இனிமையானவை.

சில நாட்களுக்குப்பின், சமாரியாவிலிருந்து படைவீரர் ஒருவர் ஓசேயாவின் வீட்டிற்கு வருகிறார்.



கிமு 738இல் மெனகேம் இறக்கிறார். அவரது மகன் பெக்காகியா இரண்டு வருடங்கள் இஸ்ரயேலை ஆட்சி செய்கிறார். பின்னர் படைத்தளபதி பெக்கா அவரைக் கொன்றுவிட்டு அரசராகிறார். அவர் சிரியாவுடன் ஒரு ஒப்பந்தம் செய்கிறார். இஸ்ரயேல், சிரியா படைகள் ஒன்றிணைந்து யூதாவின் மேல் படையெடுக்கின்றன.








சமாரியாவின் கோவிலில்
எல்லாம்வல்ல கடவுளே, யூதாவுக்கு எதிராக முன்னேறிச் செல்லும் எங்கள் படையை ஆசிர்வதித்து பலப்படுத்தும்.
?!
நிறுத்துங்கள்!
யூதா நம் சகோதரன். சமாதானத்தை நாடுகிறான். நீங்களோ நம் மக்களை அழிக்க காணிக்கை செலுத்துகிறீர்கள்.
இது அரசரின் கட்டளை.
?
நீங்கள் நீதியை உங்கள் காலடியில் போட்டு மிதிக்கிறீர்கள். கடவுள் உம் பலியை ஏற்கமாட்டார்.
!!
நாங்கள் மக்கள் நலனுக்காகத்தான் பலி கொடுக்கிறோம்.
பதுங்கியிருந்து தாக்கும் திருடர்கள்போல நீங்கள் எல்லாரும் மக்களுக்கு எதிராக ஒன்று சேர்ந்திருக்கிறீர்கள்.
இஸ்ரியேலின் நகரங்கள் முழுவதும் உங்களது இரத்தக் கறை படிந்த கால் தடங்கள் பரவியுள்ளன.


உங்கள் வாளே உங்கள் குழந்தைகளை அழிக்கிறது.
நீங்கள் ஒரு மரத்துண்டுக்குப் பலி கொடுக்கிறீர்கள்.
என் மக்களின் பாவத்தால் நீங்கள் வயிற்றை நிறைக்கிறீர்கள். அவர்களது அழிவையே நீங்கள் விரும்புகிறீர்கள்.
தலைமை குரு அமாட்சியா
மக்கள் விருப்பத்தோடு கொடுப்பதை மட்டும்தான் நாங்கள் பெற்றுக் கொள்கிறோம். நீ ஏன் இதை பாவம் என்கிறாய்?
?
யாவேயின் சட்டத்தைக் கற்றுக் கொடுப்பதற்குப் பதிலாக ஏழைகளிடம் திருடியதை நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்கள்.


இதோ யாவே கூறுகிறார். அறிவின்மையால் என் மக்கள் அழிகிறார்கள். நீர் அறிவை நிராகரித்தது போல நானும் உம்மை குருத்துவத்திலிருந்து விலக்குகிறேன்.
?!
பெரிய குருவையே பணியிலிருந்து விலக்கி வைக்கிறாயா? ஆமோசுக்கு என்ன நடந்தது என்று உனக்குத் தெரியாமல் இருக்கலாம்.
நான் உன் குடும்பத்தை அழிப்பேன். நீ அந்நிய நாட்டில் இறப்பாய்.
!!?
இறைவாக்கினர்களைப் பைத்தியம் என நினைக்கிறாயா? யாவேயால் தூண்டப்படுபவர்களைக் கொல்கிறீர்கள். அழிவின் நாட்கள் நெருங்கி விட்டன.


இஸ்ரயேலே, நீ உன் கன்னிப் பெண்களை பாகாலின் விலைமாதர்களாய் மாற்றினாய். நாட்டை சிலைகளால் நிரப்பினாய்.
உன் குற்றங்களால் நாட்டைத் தீட்டுப்படுத்தியுள்ளாய்.
யாவேயின் கோபத்தீ வடக்கிலிருந்து வந்து கொண்டிருக்கிறது. அது உன் நாட்டைத் தூய்மைப்படுத்தும்.
நான் விரும்புவது அன்பு, பலிகளல்ல. கடவுளைப் பற்றிய அறிவு, எரி பலி அல்ல.

எருசலேம் வாயிலில் படைகள்

படைவீரர்களே, வலிமை மிக்கவர்களே, இஸ்ரயேல் மற்றும் சிரியாவின் பெருமைக்குரியவர்களே, இன்று நாம் இந்நகரைத் தாக்குவோம். முன்னேறுங்கள்.

படை எருசலேமைத் தாக்குகிறது.

!!!?

சுவரைத் தகர்க்க முயற்சிக்கிறார்கள். ஆனால்...

பல நாட்கள் போருக்குப் பின்னரும், அவர்களால் சுவரைத் தகர்க்கவோ நகரினுள் நுழையவோ முடியவில்லை. இதற்கிடையே யூதாவின் அரசர் ஆகாசு அசீரியர்களின் உதவியை நாடுகிறார். அசீரியர்கள் சிரியாவின் மீது படையெடுக்கிறார்கள்.







போரைத் திடீரென நிறுத்தியதால் இஸ்ரயேல் படையினர் கடும் கோபம் கொள்கிறார்கள். படைத் தளபதிகளுள் ஒருவரான ஓசேயா பெக்கா அரசரைக் கொன்ற பின் தன்னை அரசராக அறிவிக்கிறார்.



திக்லத் பிலேசர் சிரியா நாட்டை அசீரியாவின் மாகாணங்களுள் ஒன்றாக்கிய பின் இஸ்ரயேல் மீது படையெடுத்துச் சென்று பல நகரங்களை அழிக்கிறார். ஒசேயா அரசர் மிகப் பெரிய தொகையைக் கப்பமாக கட்டியதுடன், அசீரியாவின் துணை நாடாக இருக்க சம்மதித்த பின்னர்தான் திக்லத் பிலேசர் திரும்பிச் செல்கிறார்.

இரண்டு வருடங்களுக்குப் பின் இறைவாக்கினர் ஒசேயா

யாவே இஸ்ரயேலை அதன் பாவங்களுக்காகத் தண்டிக்கிறார். ஆமோஸ் இறைவாக்கினர் வழியாக அவர் கூறியவை நிறைவேறி விட்டன.

ஏ பாகாலே! உன் புகழ் எங்கே? எத்தனை மாசற்றவர்களின் இரத்தத்தைக் குடித்தாய்? மரக்கட்டையே!

எண்ணற்ற குழந்தைகளின் உயிர்... ஏராளமான பெண்களின் கன்னிமை... ஓ என் கடவுளே!


பாகாலுக்குப் பலியானதா? அல்லது கோவில் விபச்சாரியா?
கோவில் விபச்சாரி...
கோமேர்... என் அன்பே! நீ எங்கே இருக்கிறாய்? என் குழந்தைகள் எங்கே? நான் எங்கே இருக்கிறேன்?
இது இஸ்ரியேல் அல்லவா. அதுதான் நாபோத்தின் திராட்சை தோட்டத்தில் ஆகாசு கட்டிய அரண்மனை
அப்படியானால் என் வீடு எங்கே?


இதுதான் என் வீடு. கோமேருக்கும் குழந்தைகளுக்கும் என்ன ஆனது? கோமேர், எங்கே இருக்கிறாய்?
ஓசேயா தன் பக்கத்துவீட்டு ஒதியாவிடம் விசாரிக்கிறார்.
ஓசேயா, என் மகனே, உனக்கு என்ன ஆனது?
அம்மா, என் மனைவி, குழந்தைகள் எங்கே?
நீ சென்றபின் அவள் சிறிது காலம் இங்கு தங்கி இருந்தாள். பின்னர் ஒரு படைவீரருடன் சென்று விட்டாள்.
அவள் தன் குழந்தைகளை அடிமைச்சந்தையில் விற்றுவிட்டு மகிழ்ச்சியாக வாழ்ந்தாள். இரண்டு மாதங்களுக்குப் பிறகு அவனும் அவளைக் கைவிட்டு விட்டான். இப்போது அவள் எங்கேயோ அடிமையாக வேலை செய்கிறாள்.
!?


ஓ கோமோர்! நீ எப்படி இவ்வளவு கொடூரமானவள் ஆனாய்? இவ்வளவு சீக்கிரமாக நீ என்னை மறந்து விட்டாயே!
விபச்சாரமும் அடிமைத்தனமும்! கோவில் விபச்சாரியான உனக்கு பிரமாணிக்கமுள்ள மனைவியாக இருக்கத் தெரியவில்லையே.
கோமோர், இஸ்ரியேல், லோ அம்மீ - நீங்கள் இஸ்ரயேல். யாவேயை நிராகரித்து விட்டீர்கள்.
இதோ யாவே கூறுகிறார். நான் என் மக்களை நிராகரித்து விட்டேன். என் உடன்படிக்கையை மீறியதற்காக நான் அவர்களை அழிப்பேன்.
இந்த வறண்ட குச்சியைப் போல நான் இஸ்ரயேலை உடைப்பேன். அது இனி ஒருபோதும் ஒன்றாகாது.

ஓ கோமேர், உன்னை என்னால் எப்படி மறக்க முடியும்? லோ - ருகாமா, என் மகளே!

இல்லை. நான் உன்னைக் கண்டு பிடிக்கும் வரை ஓயமாட்டேன். நீ எனக்கு சொந்தமானவள்.

யாவே கூறுகிறார்: நான் இஸ்ரயேலை அதன் பாவங்களுக்காகத் தண்டிப்பேன். ஆனால் எல்லா காலத்திற்கும் அதனை நிராகரிக்க மாட்டேன். நான் மனிதனல்ல, கடவுள்.

ஓசேயா கோமேரைத் தேடி எல்லா இடங்களிலும் அலைகிறார். இறுதியாக அவளை பெத்தேலில் ஒரு அடிமையாகக் கண்டுபிடிக்கிறார்.

என் மனைவி கோமேர் இங்குவேலை செய்வதாக கேள்விபட்டேன்.

!

ஓ! கோமேருக்கு ஒரு கணவர் இருக்கிறாரா?!

என் மனைவி எனக்குத் திரும்ப வேண்டும்.


நீ பணம் கொடுப்பதாக இருந்தால் அவளைக் கூட்டிச் செல்லலாம். அவள் தேர்ந்த அனுபவமுள்ளவள் தெரியுமா?
நிறுத்து. கோமேர் என் மனைவி. எவ்வளவு பணம் வேண்டும் என்று மட்டும் சொல்லு.
ஐம்பது வெள்ளி நாணயங்கள்
ஓசேயா பதினைந்து செக்கேலும், 600 லிட்டர் பார்லியும் கொடுத்து, கோமேரை மீட்கிறார்.
கோமேர், நீ மிகவும் பரிதாபமாக இருக்கிறாய். இவையெல்லாம் என்னைப் பிரிந்ததால்தான்.
நீ என்னை உதறித் தள்ளினாலும் நான் உன்னைக் கைவிடமாட்டேன்.
வா, இனி ஒருபோதும் என்னை விட்டு விலகாதே.

கிமு 726ல் நடந்த சில பெரிய நிகழ்வுகள் உலகளாவிய அரசியல் சூழலையே மாற்றி அமைக்கின்றன. கிமு 726 இல் திக்லத் பிலேசர் இறக்கிறார். சல்மனேசர் அவரைத் தொடர்ந்து ஆட்சிக்கு வருகிறார். இஸ்ரயேல் அசீரியாவுக்குக் கப்பம் கட்டுவதை நிறுத்திவிட்டு, எகிப்திய அரசரின் உதவியை நாடுகிறது.

இஸ்ரயேலின் அரசரான உம் ஊழியர் ஓசேயாவின் பரிசுகளை ஏற்றுக் கொள்ளும். அவர் உம்மிடம் வேண்டுவது என்னவெனில்

எழுந்திருங்கள். ஓசேயா என் நண்பன், ஊழியன் அல்ல.

!!

அசீரிய அரசர் சல்மனேசரிடமிருந்து எங்களுக்குப் பாதுகாப்பு வேண்டும்.

!

அமைதியாகச் செல்லுங்கள். இன்னும் இரண்டு மாதங்களுக்குள் நான் படையுடன் சமாரியாவில் இருப்பேன்.

பாரவோனின் வாக்குறுதியோடு தூதர்கள் சமாரியாவுக்குத் திரும்புகிறார்கள்.


சமாரியா அரண்மனையில்...
பாரவோனின் படைகள் இங்கு வந்து சேர இன்னும் ஒரு வாரம் ஆகிவிடும். அதுவரை நாம் அசீரியர்களுக்கு எதிராக போரிடவேண்டும்.
!!!?
அதோ வடக்கிலிருந்து ஒரு பெரிய படை வருகிறது.
வடக்கிலிருந்தா? சல்மனேசர் இவ்வளவு சீக்கிரமாக இங்கு வந்து விட்டாரா? நகர வாயில்கள் அனைத்தையும் மூடுங்கள். ஒவ்வொரு நாளும் பாகாலுக்கு நரபலி கொடுங்கள்.
சமாரியா தன்னைப் பாதுகாக்க தயாராகிறது.

நகருக்கு வெளியே பல நாட்களாக கடும் சண்டை நடைபெறுகிறது. ஆனால் அசீரியர்களால் பலமான பாதுகாப்புச் சுவரைத் தகர்க்க முடியவில்லை.

நம் யுத்தத்தின் யுக்தியை மாற்றுவோம். உணவுப் பொருட்கள் உள்ளே செல்வதைத் தடுத்து நிறுத்துவோம். அவர்களைப் பசியினால் சாகடிப்போம். அதே நேரம் நகரைச் சுற்றி மண்மேடு எழுப்புங்கள்.

அசீரிய முகாமில்

உணவுத் தடை மூன்று வருடங்கள் தொடர்கிறது. எகிப்தியர்கள் உதவிக்கு வரவில்லை. சல்மனேசர் இறக்கிறார். அவரது மகன் இரண்டாம் சார்கோன் அசீரிய அரசராகிறார். முற்றுகையிட்டிருந்த அவர்கள் தாக்கத் தொடங்குகிறார்கள்.

ஒவ்வொருவரும் இறந்தவர் உடல்களை உண்ணத் தொடங்குகிறார்கள்.

என் குழந்தையை நீ கொல்ல நான் அனுமதிக்க மாட்டேன்.

என் மகனைக் கடந்த வாரம் தின்ற போது என்ன நினைத்தாய்?

நகரினுள்ளே...

இறுதியாக இரண்டாம் சார்கோன் சமாரியாவைக் கைப்பற்றுகிறார். அரசர் ஓசேயாவையும் அவரது மக்களையும் நாடு கடத்துகிறார். இஸ்ரயேலை அசீரியா நாட்டின் ஒரு பகுதி ஆக்குகிறார்.





கிமு 721 ஆம் ஆண்டு ஆமோஸ், ஓசேயா இறைவாக்கினர்களின் வாக்குகள் நிறைவேறுகின்றன. வட நாடான இஸ்ரயேல் முழுவதுமாக அழிந்து போகிறது.





யாவேயின் அன்பு வேண்டுதலுக்கு இஸ்ரயேல் தன் இதயத்தைத் திறக்கவில்லை. தன் மக்களின் இதயத்தை வெற்றி கொள்ள யாவே மேற்கொண்ட போராட்டம் தென் நாடான யூதாவிலும் தொடர்கிறது. இராணுவத்தின் அக்கிரமத்திற்கும், வன்முறையான அநீதிக்கும் எதிராக கடவுள் ஒரு விவசாயி வழியாக தன் எதிர்ப்புக் குரலை எழுப்புகிறார்.

அடுத்த மாமனிதர்
மீக்கா

DEVASSY

இறுதியாக, அன்பு வலிமைமிக்கது என்பது நிரூபணமாகிறது. ஓசேயா கோமேரைத் தேடிச் செல்கிறார். உரிய பணத்தைக் கொடுத்து அவளை மீட்கிறார்.

ஓசேயா தனது வாழ்வை கடவுளின் அன்புக்கும், இஸ்ரயேலரின் பிரமாணிக்கமின்மைக்கும் ஒரு அடையாளமாகக் கருதுகிறார். சீனாய் மலை உடன்படிக்கை யாவேக்கும், அவரது மக்கள் இஸ்ரயேலருக்கும் இடையே நடந்த திருமணம் என விளக்குகிறார். பிரமாணிக்கமற்ற தன் மனைவி கோமேரை இவ்வளவு அதிகமாக தன்னால் அன்பு செய்ய முடிகிறது என்றால், இன்னும் எவ்வளவு அதிகமாக கடவுள் இஸ்ரயேலை அன்பு செய்வார். கோமேரின் பிரமாணிக்கமின்மை அவரை ஆழமாகப் புண்படுத்தியதென்றால், இஸ்ரயேலின் பாவத்தால் கடவுளின் வேதனை இன்னும் எவ்வளவு அதிகமானதாக இருக்கும். இஸ்ரயேல் மனம் வருந்தி முழு உள்ளத்தோடு யாவேயிடம் திரும்பி வரவேண்டும்; உடன்படிக்கைக்குப் பிரமாணிக்கமாய் வாழ வேண்டும் என விரும்புகிறார்.

கோமேரும் இஸ்ரயேலும் மனித குலத்திற்கு அடையாளமாகிறார்கள். மனிதன் இயல்பிலே தீமையின்பால் நாட்டமுள்ளவன். கடவுளின் முடிவற்ற அன்புதான் அவனைப் பாவத்தின் பிடியிலிருந்து மீட்க முடியும். இந்த மீட்பளிக்கும் அன்புதான் இயேசுவில் நிறைவேறிய மீட்பு வரலாறு முழுமைக்கும் உந்துசக்தியாகிறது. கடவுள் தம் ஒரே மகனை அனுப்பி, நம்மை மீட்கச் சிலுவையில் இறக்க அனுமதித்ததில்தான் அவரது அன்பின் ஆழம் வெளிப்படுகிறது எனலாம்.

கேள்விகள்

1. கோமேரின் தந்தை யார்?
2. ஓசேயா தன் குழந்தைகளுக்கு இட்ட பெயர்களும், அவற்றிற்கான பொருளும் என்ன?
3. ஏன் இஸ்ரயேலும் சிரியாவும் யூதாவுக்கு எதிராக ஒன்று சேர்ந்தார்கள்?
4. யூதாவின் அரசர் ஆகாசு ஒரு அரசரிடம் உதவி நாடினார். அவர் யார்?
5. வடநாடான இஸ்ரயேலின் கடைசி அரசர் யார்?
6. சமாரியாவை அழித்த சிரியா அரசரின் பெயர் என்ன?
7. ஓசேயாவின் கருத்துப்படி எல்லா தீமைக்கும் மூலக் காரணம் எது?
8. ஓசேயாவின் வாழ்வு ஓர் அடையாளம். விளக்குக.
9. கோமேர் எதற்கு அடையாளமாகிறார்?
10. ஓசேயாவின் வாழ்விலிருந்து நீ பெறும் செய்தி என்ன?

விவிலியப் படக்கதைகள் (பழைய ஏற்பாடு)

1.காயின் & ஆபேல் 2. ஆபிரகாம் 3. யாக்கோபு 4. யோசேப்பு 5. மோசே 6. யோசுவா 7. சிம்சோன் 8. ரூத்து 9. சாமுவேல் 10. சவுல் 11. தாவீது 12. தாவீது அரசர் 13. சாலமோன் 14. எலியா 15. ஆமோஸ் 16. ஓசேயா 17. மீக்கா 18. எசாயா 19. எரேமியா 20. எசேக்கியேல் 21. செக்கரியா 22. யோனா 23. யோபு 24. தோபித்து 25. தானியேல் 26. சூசன்னா 27. எஸ்தர் 28. யூதித்து 29. மக்கபேயர்-1 30. மக்கபேயர்-2

அடுத்த மாமனிதர்

அநீதிகளுக்கும்
வன்முறைகளுக்கும்
எதிராக புரட்சி செய்த
ஒரு விவசாயி



மீக்கா

First published in English: Fr. Micheal Karimattam, Illustration: Devasy & Benny.
Published in Tamil: Elphin & Theo,
Centre for Biblical Publications, 243, III,Main Road,
Venkatraman Nagar, Hasthinapuram, Chromepet, Chennai 600 064.
Tel : 0091.9840214232, 9159928634, Mail: Celestialpub@yahoo.com.